# யூனியன் வங்கி ஊழியர் சங்கம் (தமிழ்நாடு)

AIBEA - AIUBEA உடன் இணைக்கப்பட்டது
சிங்கப்பூர் பிளாசா, 3வது தளம், 337, லிங்கி செட்டி தெரு, சென்னை - 600 001

தொலை பேசி : **044-45000032, 9677048718** மின்அஞ்சல் : **ubeutn@gmail.com**
இணையதளம் : **bankubeutn.in**


சுற்றறிக்கை எண்:127:2023 02.12.2023

அன்பார்ந்த தோழர்களே !

## <u>தற்காலிக பணியாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம்</u>

நமது வங்கியில் பணியாற்றிவரும், இருதரப்பு ஒப்பந்த அடிப்படையில் ஊதியம் வழங்கப்படாத தற்காலிக பணியாளார்களுக்கு, அகில இந்திய யூனியன் வங்கி ஊழியர் சங்கம் எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக, தற்சமயம் குறைந்த பட்ச ஊதியம், அவர்கள் வங்கிக் கணக்கு மூலம் வழங்கப்பட்டு வருகிறது. ஒன்றிய அரசின் வழிகாட்டுதல்களின்படி, **01.10.2023** முதல் கீழ்க்கண்ட குறைந்தபட்ச ஊதியம் வழங்கப்படவேண்டும்.

| எண் | ஊர்கள் | குறைந்த பட்ச ஊதியம் (மாதம் முழுவதற்கும்) |
|---|---|---|
| 1. | சென்னை | **ரூ.751/-** |
| 2. | கோவை, மதுரை, சேலம், திருப்பூர், திருச்சி, புதுச்சேரி | **ரூ.628/-** |
| 3. | இதர ஊர்களில் | **ரூ.504/-** |

மேற்கண்ட ஊதியம் குறைந்தபட்ச ஊதியம் மட்டுமே. இதற்கு அதிகமாக ஊதியம் பெற்றுவரும் பணியாளர்கள், அந்த தொகையைத் தொடர்ந்து பெற்றுவரலாம்.

மேலே குறிப்பிட்டுள்ள குறைந்த பட்ச ஊதியம் அனைத்து தற்காலிக பணியாளர்களுக்கும் வழங்கப்படவேண்டும். அதற்கு குறைவாகக் கொடுப்பது, நமது வங்கியின் உத்தரவுக்கு எதிரானதாகும்.

மேற்கண்ட ஊதியத்திற்கும் குறைவாக பெறும் பணியாளர்கள், பிராந்திய சங்க நிர்வாகிகளை உடனடியாகத் தொடர்புகொள்ளவும்.

தோழமை வாழ்த்துகளுடன்,

**(அ.சிதம்பரம்)**
**பொதுச் செயலாளர்**